


**காய்ந்தாலும் காசு**

இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன் என்பது யானைக்கு மட்டும் பொருந்தும் மொழி யல்ல... இதை மீனுக்கும் சொல்லலாம். கடலூரில் அளவுக்கு அதிகமாக சிக்கிய மத்தி மீன்கள் கருவாடாகி ஏற்றுமதியாகிறதாம்.








# தேடி வந்த வரனும் தடுக்கும் மாமனாரும்

**டியர் டாக்டர்,**

என் வயது 25. இந்த வருடம்தான் எம்.பி.பி.எஸ். முடித்திருக்கிறேன். அன்பான பெற்றோர், கவலைகள் இல்லாத அழகான வாழ்க்கை என இத்தனை வருடங்கள் சந்தோஷமாகத்தான் கழிந்தது. படிப்பை முடித்ததால், வீட்டில் வரன் பார்க்க ஆரம்பித்தார்கள். எனக்கும் அதுவரை காதல் மாதிரி எந்தச் சலனமும் இல்லை என்பதால், பெற்றோர் பார்க்கும் பையனையே கல்யாணம் முடிக்க சம்மதித்தேன்.

அப்படியே எனக்கேற்ற ஒரு வரனைப் பார்த்தார்கள். எனக்கும் பிடித்திருந்தது. ஜாதகப் பொருத்தமெல்லாம் சரியாக இருப்பதாக அவர்கள் பக்கத்தில் இருந்து சொன்ன பிறகு, நாங்கள் இருவரும் அடிக்கடி பேசிக் கொள்ள ஆரம்பித்தோம். அவர் இருப்பதோ லண்டனில். ஆனாலும் தினசரி என்னுடன் பேசுவார். அப்படியே எங்களுக்குள் நெருக்கம் வளர்ந்து, கிட்டத்தட்ட காதலர்கள் மாதிரியே மாறினோம். ஒவ்வொரு நாளும், நிமிடமும் சந்தோஷமாகவே கரைந்தது. அவரது அம்மா, அப்பா எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். என்னிடம் நன்றாகப் பேசிப் பழகினார்கள்.

ஒரு மாதம் கழித்து, திடீரென அவரது அப்பா, எங்கள் இருவரின் ஜாதகமும் பொருந்தவில்லை என்றும், இந்த சம்பந்தம் வேண்டாம் என்றும் குண்டைத் தூக்கிப் போட்டார். என்னவரும் அவரது பெற்றோரிடம் எவ்வளவோ போராடிப் பார்த்திருக்கிறார். சம்மதிக்க வைக்க முடியவில்லை. ஒரு கட்டத்தில் அவர் தன் பெற்றோரை எதிர்த்துக் கொண்டு, என்னைத் திருமணம் செய்யத் தயாராகி விட்டார். அவர் பெற்றோர் சம்மதமின்றி இந்தக் கல்யாணம் நடப்பதில் எனக்குத்தான் குற்ற உணர்வு வாட்டுகிறது.

இன்னொரு பக்கம் யோசித்தால், இது எல்லாவற்றையும் தூக்கிப் போட்டுவிட்டு, மருத்துவத் துறையில் கவனம் செலுத்தலாம் போலத் தோன்றுகிறது. என்ன செய்வதென்றே புரியாமல் குழம்பித் தவிக்கிற எனக்கு நல்ல ஆலோசனை சொல்லுங்களேன்...

-பெயர் வெளியிட விரும்பாத புதுவை வாசகி.




''எதுக்கு தலைவரே கட்சி நிர்வாகிகளை மாத்துறீங்க?''
''அப்போதானே... கட்சினு ஒண்ணு இருக்கிறதை ஞாபகப்படுத்தலாம்!''
- பா.து.பிரகாஷ், தஞ்சாவூர்.



## அன்புச் சகோதரி,

உறவுச் சிக்கலுக்கு தீர்வு சொல்கிறார் மன நல மருத்துவர் கவுதம் தாஸ்



கல்யாணமா? மருத்துவத் துறையா? இரண்டில் எதற்கு முக்கியத்துவம் என முதலில் முடிவு செய்யுங்கள். தொழில்தான் முக்கியம் என நினைத்தால், கல்யாணப் பேச்சைக் கொஞ்சம் தள்ளி வைக்கலாம். அந்த இடைவெளியில், அவரது பெற்றோரை சம்மதிக்க வைக்கிற முயற்சிகளைத் தொடரலாம். கல்யாணம்தான் முக்கியம் என நினைத்தால், அவரது அப்பா திடீரென இந்த சம்பந்தத்தை ஏன் எதிர்க்க வேண்டும் என யோசியுங்கள். முதலில் பொருந்திப் போன ஜாதகம், பிறகு எப்படி தவறாகும்? வேறு ஏதேனும் காரணமிருந்து, அதை மறைக்க, ஜாதகம் சரியில்லை என சாக்கு சொல்கிறாரா எனத் தெரிந்து கொள்ளுங்கள்.

மாப்பிள்ளையின் பெற்றோர் சம்மதத்துடன் இந்தக் கல்யாணம் நடக்க வேண்டும் என நினைக்கிற உங்கள் எண்ணத்தைப் பாராட்டுகிறேன். அதுதான் உங்கள் எதிர்காலத்துக்கும் நல்லது. நீங்கள் இருவரும் இந்தக் கல்யாணத்தில் உறுதியாக இருக்கும் போது, அதை மீறி, உங்கள் இருவருக்கும் வேறு நபர்களுடன் கட்டாயத் திருமணம் நடந்து விடாது. பொறுமையாக இருந்தீர்களேயானால், இந்தக் கல்யாணத்தை எதிர்க்கும் உங்களவரின் அப்பாவே மனம் மாறுவார்.

அனாவசிய விஷயங்களைக் குழப்பிக் கொள்ளாமல், நீங்கள் உடனடியாக Professional and Linguistic Assessments Board (PLAB) டெஸ்ட் எழுதி, உங்களவர் இருக்கும் லண்டனிலேயே மருத்துவம் பார்க்கிற முயற்சிகளில் இறங்குங்கள். அவரது அருகிலேயே வசிப்பது உங்கள் முயற்சிக்கு இன்னும் பலம் சேர்க்கும். இந்தத் திருமணத்தில் நீங்கள் எவ்வளவு தீவிரமாக இருக்கிறீர்கள் என்பதை அவரது பெற்றோருக்கும் உணர்த்தும். நிச்சயமாக அவரது பெற்றோர் மனம் மாறி, இந்தக் கல்யாணம் நடக்கும். அதற்குத் தேவை நிறைய பொறுமை! நல்லதே நடக்க வாழ்த்துகள்!

**தொகுப்பு: ஆர்.வைதேகி**

மேலும் பெண்களுக்குப் பயனுள்ள செய்திகளுக்கு: http://www.dinakaran.com/ladiesnew

# உலகமே ஒரு டிராமாதான்

**சா**ஃப்ட்வேர் இன்ஜினியரான பையனிடம் 'பென் டிரைவ்' பற்றிக் கேட்கிறார் வயதான அந்தக்காலத்து அப்பா. 'தெரிஞ்சு என்ன செய்யப் போறீங்க?' என்கிறான் பையன். அப்பாவின் மனதில் அன்று பையனுக்கு கேசட் பற்றிச் சொல்லித்தந்தது நிழலாடுகிறது. கொஞ்ச தூரத்துக்கு உடன் வாக்கிங் வரக் கேட்கிறார். 'செவனேன்னு வீட்ல கிடக்க மாட்டீங்களா?' என்கிறான். இப்போது சிறு வயதில் அவனுக்கு நடை பழக்கி விட்டது ஞாபகத்தில்.

அப்பாவுக்கும் பிள்ளைக்குமான தலைமுறை இடைவெளியை நெகிழ்ச்சியோடு சொல்லும் 'பிரியமுடன் அப்பா' நாடக காட்சி இது. சென்ற கோடை நாடக விழாவில் பலத்த பாராட்டுதல்களைப் பெற்ற இந்த நாடகத்தில் பெண் கேரக்டர்களே இல்லை! இதை இயக்கியிருப்பவர் சி.வி.சந்திரமோகன்.



''அப்பா பி.டி.ஐ.யில வேலை பார்த்தார். சித்தப்பா மலையாளத்துல சாகித்ய அகடமி வின்னர். அண்ணன்மார்கள் ஃப்ரீலான்ஸ் பத்திரிகையாளர்களா இருந்தாங்க. அதனால தானோ என்னவோ எழுத்தார்வம் எனக்குள்ள இயல்பாவே இருந்திச்சு. தனியார் கம்பெனியில வேலை பார்த்த நண்பர் ஜெயக்குமார், என்னோட கலை ஆர்வம் பார்த்துட்டு அவங்க கம்பெனி தயாரிச்ச ஒரு நாடகத்துக்கு டயலாக் எழுதற வாய்ப்பை வாங்கித்தந்தார். நாடகத் துறையில எனக்கு நல்லவொரு விடியலைத் தந்தது, 'பொழுது விடிஞ்சாச்சு'ங்கிற அந்த நாடகம்தான். அதுக்கு அப்புறம் இந்திய அளவுலயும், தமிழகத்தின் அனைத்து ஊர்கள்லயும் நிறைய நாடகங்கள் எழுதி, இயக்கி மேடை ஏற்றியிருக்கேன்.

இன்னிக்கி மேடை நாடகங்களுக்கு மவுசு இல்லைனு சொல்றாங்க. ஆனா, காலத்துக்கு தகுந்தபடி அப்டேட் பண்ணிகிட்டா, நிச்சயம் மேடை நாடகங்களையும் மக்கள் ரசிப்பாங்க... ஏன்னா, உலகமே ஒரு நாடக மேடைதானே?'' என்கிறார் சந்திரமோகன்.

**- குருவிராஜன்**

படம்: லோகநாதன்